நம் வாழ்வியல் சூழலில் சங்க இலக்கிய மரங்கள் - ஓர் எளிய வழி காட்டி

பகுதி - I



நம் வாழ்வியல் சூழலில் சங்க இலக்கிய மரங்கள் - ஓர் எளிய வழி காட்டி பகுதி - I

சங்க இலக்கியங்களில் மரங்களின் இடம் மிகவும் முக்கியமானது. சங்கப் பாடல்களில் இயற்கை, மனித வாழ்க்கை, காதல், போர், பொருள் போன்றவை ஒருங்கே ஒன்றினைந்து இருக்கின்றன. அதில் இயற்கையின் அங்கங்களாக மரங்கள், காடுகள், தாவரங்கள் அனைத்தும் தனித்துவமாகச் சித்தரிக்கப்படுகின்றன.

சங்க இலக்கியக் கவிஞர்கள் இயற்கையையும் மனித உணர்வுகளையும் ஒன்றிணைத்துச் உரைப்பதால், மரங்கள் வெறும் தாவரங்கள் அல்லாமல் சூழல், உணர்ச்சி, கலாச்சாரம் ஆகியவற்றின் அடையாளங்களாகவும் விளங்குகின்றன.

ஐந்திணை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான மரங்களும் தாவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

- குறிஞ்சி நிலம் (மலையும் மலை சார்ந்த நிலம்): குருந்தம், வெம்பாலை, காந்தள் போன்ற மரங்கள்.
- முல்லை நிலம் (காடும் காடு சார்ந்த நிலம்): முல்லை, வாகை, வேம்பு, இலந்தை போன்ற மரங்கள்.
- மருத நிலம் (வயலும்/வயல் சார்ந்த நிலம்): மருதம், நெல்லி, புளிய மரம்.
- நெய்தல் நிலம் (கடலும் கடல் சார்ந்த நிலம்): தாழை, பனை.
- பாலை நிலம் (வறண்ட வளமிழந்த குறிஞ்சி மற்றும் முல்லை நிலம்): பாலை, காடம்பு, வாகை போன்றவை.

மேலும், சங்கப் பாடல்களில் குறிப்பிடப்படும் மரங்கள் உணவுக்கும், மருந்துக்கும், வழிபாட்டுக்கும், காதல் மற்றும் வீர உணர்வுகளுக்கும் தொடர்புடையவையாகச் சித்தரிக்கப்படுகின்றன.

குறிப்பாக, சங்க இலக்கியம் இயற்கையின் சிறந்த பதிவு; அதில் மரங்கள் மனித வாழ்க்கையோடு இணைந்திருக்கும் வகையில் கலைநயத்துடன் இடம் பெற்றுள்ளன

01

சங்க இலக்கிய பெயர் - கொன்றை, கடுக்கை
தாவரவியல் பெயர் - *Cassia fistula* L.
ஆங்கிலப் பெயர் - Golden shower, Indian Laburnum

பாடல்

“தூங்கினர்க் கொன்றை”-குறிஞ். 86

உரை

தொங்குகின்ற இயல்பை உடைய இதன் நீண்ட பூங்கொத்தை மேல் நோக்கி வளைத்துக் கட்டி வைத்தாலும் இதன் இணர் திரும்பத் திரும்ப கீழ் நோக்கியே வளரும். அதனையே கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

02

சங்க இலக்கிய பெயர் – கோங்கம்
தாவரவியல் பெயர் - *Cochlospermum religiosum* (L.) Alston
ஆங்கிலப் பெயர் - Yellow Silk Cotton Tree, Golden Silk Cotton Tree

பாடல்

‘தண் நறும் கோங்கம் மலர்ந்த வரை எல்லாம்’ - கலி 42:16

உரை

“மலைத் தேசம் முழுவதும் குளிர்ச்சியான காற்றில் மணம் வீசும் கோங்கு மலர்கள் மலர்ந்து பரவியிருக்கின்றன என்று பாடல் சித்தரிக்கிறது.”

03

சங்க இலக்கிய பெயர் – ஓமை,உழா, உவா
தாவரவியல் பெயர் - *Dillenia indica* L.
ஆங்கிலப் பெயர் - Elephant Apple

பாடல்

“உவர் எழுகளரி ஓமை அம்காட்டு
வெயில் வீற்றிருந்த வெம்பு அலை அருஞ்சுரம்”– நற். 84:8-9

உரை

நதி ஓரத்தில் நிழலளிக்கும் மரங்களால் சூழப்பட்ட காடு, வெயிலில் ஓமை மரங்களின் நிழல்கள் அற்புதமாக அலைபாயும் காட்சியை காட்டுகிறது.

04 சங்க இலக்கிய பெயர் - திலகம்
தாவரவியல் பெயர் - *Adenanthera pavonina L.*
ஆங்கிலப் பெயர் - Red Bead Tree

பாடல்

“நாகம் திலகம் நறுங்காழ் ஆரம்” - மலைபடு. 520

உரை

“மலைப்பகுதிகளில் நாகமரம், திலகமரம் (மஞ்சாடி), மணமிக்க காழ்மலர், ஆரமலர் ஆகியவை ஒன்றிணைந்து வளர்ந்து, இயற்கையின் அழகையும் மணமையும் பெருக்குகின்றன.”

05 சங்க இலக்கிய பெயர் - கூவிளம்-வில்வம்
தாவரவியல் பெயர் – *Aegle marmelos* Corrn.
ஆங்கிலப் பெயர்- Bael

பாடல்

“பொருந்தா தெவ்வர் அரிந்த தலையடுப்பில்
கூவிளவிறகின் ஆக்குவரி நுடங்கல்” - புறநா: 372: 5-6

உரை

அன்றியும், பகைவரதுதலைகளாகிய அடுப்பில், கூவிள மரத்தின் விறகைக் கொண்டு எரிப்பர் என்று புறநானூறு கூறுகின்றது.

06 சங்க இலக்கிய பெயர் – உழிஞ்சில்
தாவரவியல் பெயர் – *Albizia amara (Roxb.) Boivin*
ஆங்கிலப் பெயர் - Krishna Siris

பாடல்

“அத்தக் குடிஞைத் துடிமருள் தீங்குரல்
உழுஞ்சில்அம் கவட்டிடை இருந்த பருந்தின்
பெடைபயிர் குரலொடு இசைக்கும் ஆங்கண்” - புறம் 370

உரை

உழிஞ்சில் மரத்தில் இருந்துகொண்டு குடிஞை என்னும் ஆந்தைப் பறவை துடிப்பறை போல முழங்கும்.

07

சங்க இலக்கிய பெயர் – வாகை
தாவரவியல் பெயர் – *Albizia lebbeck* (L.) Benth.
ஆங்கிலப் பெயர் - Indian Siris

பாடல்

“போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த
கடவுள் வாகைத் துய்வீ ஏய்ப்ப
பூத்த முல்லை புதல்சூழ் பறவை” - பதிற்.ப. 66: 14-16

உரை

வீரப்போர் புரியும் மல்லர்கள் கூடிப் புனிதமான வாகை மரத்தின் கீழ் வெற்றியைத் துயிலிடும் போது, மலர்ந்த முல்லைச் செடிகளின் இடையே, குஞ்சுகளைச் சூழ்ந்த பறவைகள் கீச்சிடுகின்றன”.

08

சங்க இலக்கிய பெயர் - காழ்வை - அகரு - அகில்
தாவரவியல் பெயர் - *Dysoxylem malabaricum*
ஆங்கிலப் பெயர் - White cedar

பாடல்

“அகரு வழைஞெமை ஆரம் இனைய” - பரிபா 12:4

உரை

அகில் (அகரு) மரங்கள் வளம் பெற்று வளர்ந்து, அழகிய ஆரம் (தோளில் அணியும் அழகிய அலங்கார வளையம்) போன்ற அமைப்பில் காட்சி தருகின்றன.

09

சங்க இலக்கிய பெயர் – கமுகு
தாவரவியல் பெயர் – *Areca catechu* L.
ஆங்கிலப் பெயர் - Betel, Arecanut

பாடல்

“பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கரு இருந்தன்ன” – பெரும்பா: 7-8

உரை

அரசரின் பாளையம் (இராணுவ முகாம்) கமுக மரங்களால் சூழப்பட்டு, பசுமைமிக்க அழகோடு, கரும் குதிரைகளைப் போலச் சீருடனும் வலிமையுடனும் தெரிந்தது.

10

சங்க இலக்கிய பெயர் – பலவு
தாவரவியல் பெயர் - *Artocarpus heterophyllus* Lam.
ஆங்கிலப் பெயர் - Jackfruit

பாடல்

“கலை தொட இழுக்கிய பூ நாறு பலவு கனி” - குறு.90:4

உரை

ஆண்குரங்கு தொட்டாவுடன் வீழ்ந்த பூ மணக்கும் பலாப்பழம்.

11

சங்க இலக்கிய பெயர் – ஆசினி
தாவரவியல் பெயர் - *Artocarpus hirsutus Lam.*
ஆங்கிலப் பெயர் - Hairy Bread-Fruit Tree, Wild Jack Fruit

பாடல்

“உடம்புணர்பு தழீஇய ஆசினி அனைத்தும்//
குட மலை பிறந்த தண் பெரும் காவிரி” - மலைபடு, 526-527

உரை

உடம்புக்குத் தனித் தெம்பைத் தரும் குறும்பலா. இவையும் இவை போன்று குடமலையில் விளைந்த அனைத்துப் பொருள்களும் கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்தன.

12

சங்க இலக்கிய பெயர் - வேம்பு
தாவரவியல் பெயர் – *Azadirachta indica* A.Juss
ஆங்கிலப் பெயர் - Neem

பாடல்

“கோட்டினர் வேம்பின் ஓடு இலை மிடைந்த
படலைக் கண்ணி”-பெரும் : 59-60

உரை

வீட்டின் முகப்பிலும் வேப்பிலை செருகப்படுவதை இலக்கியங்கள் கூறுமென்பர்.

13

சங்க இலக்கிய பெயர் - செங்கடம்பு,கடம்பு
தாவரவியல் பெயர் – *Barringtonia acutangula* (L.) Gaertn.
ஆங்கிலப் பெயர் - Indian Oak Barringtonia

பாடல்

“நறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் துணையார் கோதை” - சிறுபா. 69-70

உரை

நறுமணமிக்க நீர்க் குளங்கள் நிறைந்து, அதன் கரைகள் அடர்ந்து நிற்க,
அங்கு தண்ணீர் ஊறும் கடம்பு மரங்களும்,
அவற்றின் அடியில் வளரும் அழகிய கொடிகளும் தோன்றுகின்றன.

14

சங்க இலக்கிய பெயர் –ஆர், ஆத்தி, மந்தாரம்
தாவரவியல் பெயர் - *Bauhinia racemosa* Lam.
ஆங்கிலப் பெயர் - Bidi Leaf Tree

பாடல்

“மண்டா னிறைந்த பெரும்புகழ் மாறன்
மந்தா ரமெனும் தண்டாரன்”-பெ.பு

உரை

மன்னர்கள் தமக்குரிய பூக்களைச் சூடுவர் எனினும், நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னன் தனக்குரிய வேப்பம் பூவையன்றி, மந்தார மலர்த் தாரைச் சூடும் விருப்பினன் என்பர்

15

சங்க இலக்கிய பெயர் - இலவு, இலவம்.
தாவரவியல் பெயர் – *Bombax ceiba* L.
ஆங்கிலப் பெயர் - Malabar Silk-Cotton Tree, Red Silk-Cotton

பாடல்

“களிறுபுலம் உரிஞ்சிய கருங்கால் இலவம்”-அக நா. 309 : 7

உரை

களிறு தன்னுடைய தினவைப் போக்கிக்கொள்வதற்கு இம்முள்ளமைந்த அடி மரத்தில் உராய்ந்து தேய்த்துக் கொள்ளும்.

16 சங்க இலக்கிய பெயர் - பனை மரம்
தாவரவியல் பெயர் - *Borassus flabellifer* L.
ஆங்கிலப் பெயர் - Palmyra Palm

பாடல்

"தலையோர் நுங்கின் தீங்சோறு மிசைய
இடையோர் பழத்தின் பைங்கினி மாந்த
கடையோர் விடுவாய் பிசிரோடு சுடுகிழங்கு நுகர
நில மலர் வையத்து வல முறை வளைஇ." - புநா: 255

உரை

சோழனின் படைகள் எத்தனை அடுக்குகளாகப் பரந்திருந்தனவோ, பனைமரத்தின் பல பருவங்களாகப் பயன் தருவது போல, ஒவ்வொரு படையினருக்கும் தேவையான வலிமை, உணவு, ஆயத்தம் இருந்தது.

17 சங்க இலக்கிய பெயர் – பலாசம் , புழகு, முருக்கு
தாவரவியல் பெயர் – *Butea monosperma* (Lam.) Kuntze
ஆங்கிலப் பெயர் - Flame of the Forest

பாடல்

"பாசரும்பு ஈன்ற செம்முகைமுருக்கினை"-அகநா. 229 : 16

உரை

முருக்குப் பூ சிவந்த முகத்துடன் கொடியிலிருந்து மலர்ந்தது போல என்று இயற்கை காட்சியை அழகாகப் படம் பிடித்துள்ளனர்.

18 சங்க இலக்கிய பெயர் - புன்னை
தாவரவியல் பெயர் – *Calophyllum inophyllum* L.
ஆங்கிலப் பெயர் - Indian Laurel

பாடல்

"நறுவீ ஞாழலொடு புன்னை தா அய்"-குறுந். 318 : 2

உரை

புன்னை மரம் தாழையொடும் வளரும் என்பர்

19

சங்க இலக்கிய பெயர் - யா மரம்
தாவரவியல் பெயர் – *Shorea roxburgii.*
ஆங்கிலப் பெயர் - Talura lac tree

பாடல்

"பருந்து இருந்து உயா விளி பயிற்றும் யா
உயர் நனம் தலை - அகம்".19:2-3

உரை

பருந்து இருந்து வருந்தும் குரலில் பலமுறை அழைக்கும் யா மரங்களின் உயர்ந்த அகன்ற இடம் என கூறுகிறது.

20

சங்க இலக்கிய பெயர் – சிறுமாரோடம்-செங்கருங்காலி
தாவரவியல் பெயர் - *Diospyros ebenum* J.Koenig
ஆங்கிலப் பெயர் - Indian Ebony

பாடல்

"நறுமோரோடமொடு உடன் எறிந்து அடைச்சிய
செப்பிடந்தன்ன நாற்றம் தொக்கு உடன்
அணிநிறங் கொண்ட மணிமருள் ஐம்பால்
தாழ் நறுங்கதுப்பில் பையென முழங்கும்
அரும்பெறற் பெரும் பயம் கொள்ளாது
பிரிந்துறை மரபின் பொருள் படைத்தோரே"-நற். 337

உரை

செங்கருங்காலி மரம் மிக வலிமையானது. வேலைப்பாடுகள் கூடிய மர வேலைக்குப் பெரிதும் பயன்படுவது. இதன் மலர் பசிய மஞ்சள் நிறமானது. சிறந்த நறுமணம் உடையது. இதனை மகளிர் கூந்தலில் அணிவர்.

21

சங்க இலக்கிய பெயர் - கவிர் , புழகு
தாவரவியல் பெயர் – *Erythrina variegata* L.
ஆங்கிலப் பெயர் - Tiger's Claw or Indian Coral Tree

பாடல்

"கார் அணி கூந்தல், கயல்கண், கவிர்இதழ்"- பரிபா. 22: 28

உரை

கவிரின் இதழ், மகளிர் செவ்வாய் இதழிற்கு உவமையாகக் காட்டப்படுகின்றது

22 சங்க இலக்கிய பெயர் - ஆலமரம்,முதுமரம்
தாவரவியல் பெயர் – *Ficus benghalensis* L.
ஆங்கிலப் பெயர் - Indian Banyan

பாடல்

"எம் மூர் வாயில் ஒண்டுறைத் தறைஇய
கடவுள் முதுமரத்து..."- பு.நா: 398

உரை

"எங்கள் ஊரின் வாயிலில், அழகாகத் திகழ்ந்து, தெய்வம் தாங்கிய பண்டைய மரம்..."

23 சங்க இலக்கிய பெயர் - அத்தி மரம்
தாவரவியல் பெயர் – *Ficus racemosa* L.
ஆங்கிலப் பெயர் - Indian Fig Tree

பாடல்

"அத்தி நெடுவேர் அணங்குடைச் சிறுகிளை" -
அகம். 136

உரை

"இங்கு அத்தி மரத்தின் ஆழமான வேர் மற்றும் சிறு கிளைகள் காதல் உவமையாகக் கூறப்படுகிறது"

24 சங்க இலக்கிய பெயர் - அரையம்
தாவரவியல் பெயர் – *Ficus religiosa* L.
ஆங்கிலப் பெயர்- Sacred Fig

பாடல்

"வேனில் அரையத்து இலை ஒலி வெரீஇ,
போகில் புகா உண்ணாது, பிறிது புலம் படரும்
வெம்பு அலை அருஞ் சுரம் நலியாது
எம் வெங் காதலி பண்பு துணைப் பெற்றே" -
ஐங் 325:1,2

உரை

வேனில் காலத்து அரசமரத்தின் இலைகள் எழுப்பும் ஒலியினைக் கேட்டு வெருண்டு பறவைகள் தம் உணவினை உண்ணாமல், வேறிடத்துக்குப் பறந்து செல்லும்.

25

சங்க இலக்கிய பெயர் - இத்தி
தாவரவியல் பெயர் – *Ficus retusa* L.
ஆங்கிலப் பெயர் - Indian laurel

பாடல்

“கல்அதர்க் கவலை போகின் சீறூர்ப்/
புல்அரை இத்திப் புகர்படு நீழல்” - அகம் 77

உரை

கழுகு குடலை ஈர்க்கும் அந்தக் கல்லுப்பாதை ஆங்காங்கே பிரிந்து செல்லும் கவலைப்பாதை கொண்டது. வழியில் உள்ள ஊர்களில் இத்தி மரம் புள்ளி புள்ளியான நிழல் கொண்டதாய் இருக்கும். அந்த நிழலிலும் வெயில்-காற்று வீசும்.

26

சங்க இலக்கிய பெயர் - பசும்பிடி
தாவரவியல் பெயர் - *Garcinia spicata* (Wight & Arn.) Hook.f.
ஆங்கிலப் பெயர் - Garlic Fruit

பாடல்

“கரும்பார் சோலைப் பெரும்பெயர் கொல்லிப்
பெருவாய் மலரொடு பசும்பிடி மகிழ்ந்து” - பதிற்றுப்பத்து 81: 24-25

உரை

அடர்ந்த பசுமை நிறைந்த சோலைகளில், புகழ்பெற்ற கொல்லி மரமும், விரிந்து மலர்ந்த மலர்களோடு பசும்பிடி மரமும் வளம் கொண்டு காட்சியளிக்கிறது.

27

சங்க இலக்கிய பெயர் - குமிழ்
தாவரவியல் பெயர் – *Gmelina arborea* Roxb. ex Sm.
ஆங்கிலப் பெயர் - White Teak, Beechwood

பாடல்

“குமிழ் தலைமயங்கிய குறும் பல் அத்தம்”- நற்.274:5

உரை

பனித்துளிகள் படிந்து மின்னும் குடைபோன்ற மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இளம் கிளைகளுடன் கூடிய குமிழ் மரம்.

28 சங்க இலக்கிய பெயர் - உன்னம்
தாவரவியல் பெயர் – *Grewia tiliifolia* Vahl
ஆங்கிலப் பெயர்- Dhaman or Common Indian Linden

பாடல்

"திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையி னிரவலர் வருவரது" - புறம் 3

உரை

வளைந்த வாயினையுமுடைய பருந்து இருந்து வருந்தும் உன்ன மரத்தினையுடைய அணுகுதற்கு சிரமமான வழியில் உன்னிடம் கொண்ட அன்பினால் பொருள் பெற விரும்பி வருவார்கள்.

29 சங்க இலக்கிய பெயர் - விளா-வெள்ளில்
தாவரவியல் பெயர் – *Limonia acidissima* L.
ஆங்கிலப் பெயர்- Wood Apple

பாடல்

"விளம் பழம் கமழும் கமஞ் சூழ் குழீஇ" - நற். 12 : 1

உரை

தயிர்த்தாழியில் நறுமணம் கமழுதற்கு அதனுள் விளாம்பழத்தை வைத்து மணமேற்றுவர் என்று தெரிகிறது.

30 சங்க இலக்கிய பெயர் –இருப்பை இலுப்பை
தாவரவியல் பெயர் – *Madhuca longifolia* (L.) J.F.Macbr.
ஆங்கிலப் பெயர் - Indian Butter Tree

பாடல்

"கான இருப்பை வேனில் வெண்பூ
அங்கண் குறுமுயல் வெருவ,
அயல கருங்கோட்டு இருப்பைபூ உறைக்குந்து" - புறம் - 384

உரை

இருப்பைமரம் மிகுமணம் கொண்டது. இனிப்புச்சுவை கொண்ட மணமிக்க இப்பூ ஒருகோட்டுப் பூவாகும். இது பாலை நிலப்பூவாகும். உள்துளையோடு சுவையும் உடையது.

31 சங்க இலக்கிய பெயர் - பெருந்தண்சண்பகம்
தாவரவியல் பெயர் – *Magnolia champaca* (L.) Baill. ex Pierre
ஆங்கிலப் பெயர் - Champak

பாடல்

"அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல" - கலி. 150:20- 21

உரை

சூரர் மகளிர், வேண்டுவனவற்றைக் கூட்டி முற்ற முடித்த குற்றமற்ற கொண்டையிலே பெரிய குளிர்ந்த சண்பகப்பூவைச் செருகினார் என்பர் நக்கீரர்.

32 சங்க இலக்கிய பெயர் - தேமா,மா
தாவரவியல் பெயர் – *Mangifera indica* L.
ஆங்கிலப் பெயர் - Mango

பாடல்

"இளமாங்காய்ப் போழ்ந்தன்ன கண்ணினால்
என்னெஞ்சம்
களமாக்கொண்டு ஆண்டாய் ஓர்கள்வியை
அல்லையோ" - கலித். 108 : 28-29

உரை

பச்சை மாங்கனியைப் போன்ற பசுமையோடு மிளிரும் கண்களால் என் இதயத்தை ஆட்கொண்டு, விளையாட்டாக ஆளுகின்றாய். அன்பானவளே! இது நீதானோ?

33 சங்க இலக்கிய பெயர் – வகுளம்–மகிழம்
தாவரவியல் பெயர் – *Mimusops elengi* L.
ஆங்கிலப் பெயர் - Bullet Wood

பாடல்

"பசும்பிடி வகுளம் பல்இணர்க் காயா"-குறிஞ். 70

உரை

பசுமையுடன் மிளிரும் வகுள மரம் பல கனிகள் தாங்குவது போல, என் நெஞ்சமும் உன் காதலின் வேதனையால் மிகுந்த சுடருடன் எரிகிறது.

34 சங்க இலக்கிய பெயர் - முருங்கை
தாவரவியல் பெயர் – *Moringa oleifera* Lam.
ஆங்கிலப் பெயர் - Drumstick Tree

பாடல்

"நெடுங்கால் முருங்கை வெண் பூத்தாஅய்
நீர்அற வறந்த நிரம்பா நீள்இடை" - அகம். 53 : 4-5

உரை

நீரற்ற வறண்ட நிலத்தில், உயரமாக வளர்ந்த முருங்கை மரம் வெண்மலர்களால் மலர்ந்திருந்தது; ஆனால் அந்த நீண்ட பரப்பில் வேறு எதுவும் வளம் பெறாமல் வெறுமையாகக் காணப்பட்டது.

35 சங்க இலக்கிய பெயர் - மரா –வெண்கடம்பு
தாவரவியல் பெயர் – *Neolamarckia cadamba* (Roxb.) Bosser
ஆங்கிலப் பெயர் - Burflower-Tree, Kadam

பாடல்

"கேளாய் எல்ல தோழி வாலிய
சுதைவிரிந் தன்ன பல்பூ மராஅம்" - அகநா. 211 : 1-2

உரை

ஓ தோழி! கேளாய் – உயரமாக நிற்கும், சுண்ணாம்புப் பூசியது போல வெண்மையுடன் மலர்ந்த மரா மரம் போல...

36 சங்க இலக்கிய பெயர் - நெல்லி
தாவரவியல் பெயர் – *Phyllanthus emblica* L.
ஆங்கிலப் பெயர் - Indian Gooseberry

பாடல்,

"சிறியிலை நெல்லிக் காய்கண் டன்ன
குறுவிழிக் கண்ண கூரல்அம் குறுமுயல்" - அகநா. 284 : 1-2

உரை

நெல்லி மரத்தின் இலை மற்றும் பழம் பார்த்து மகிழும் போது, காதலியின் கூர்மையான கண்கள் சிறிய முயல் போல இனிமையாக மின்னும்.

37

சங்க இலக்கிய பெயர் – புன்கு
தாவரவியல் பெயர் - *Pongamia pinnata* (L.) Pierre
ஆங்கிலப் பெயர் - Indian Beech

பாடல்

"செந்தலையெ வெண்களைய புன்கம் பொரி அணிந்தவே" - கு.தொ. 3

உரை

செந்தலை மலரும், வெண்மையான அலரி மலரும், புன்னை மரம் அலங்கரித்த அழகிய வேனிலத்து மலர்களும் அழகானவையே.

38

சங்க இலக்கிய பெயர் - வன்னி
தாவரவியல் பெயர் – *Prosopis cineraria* (L.) Druce
ஆங்கிலப் பெயர் - Persian mesquite

பாடல்

"வம்பார் கொன்றை வன்னி மத்தம் மலர்தூவி
நம்பா வென்ன நல்கும் பெருமான் உறைகோயில்
கொம்பார் குரவு சொகுடி முல்லை குவிந்தெங்கும்
மொய்ம்பார் சோலை வண்டு பாடும் முதுகுன்றே" - இ.திரு. 2

உரை

மலைப்பகுதியில், வம்பார் கிழங்கு மற்றும் வன்னி மரங்கள் மலர்ந்த தோட்டங்களில், சிவபெருமான் வணங்கப்படும் கோவில் அமைந்துள்ளது. அங்கு குறும்புப் பறவைகள் குரல் கூறி, முல்லை மலர்கள் மணமிட்டு மலர்ந்திருக்கின்றன.

39

சங்க இலக்கிய பெயர் – வேங்கை
தாவரவியல் பெயர் - *Pterocarpus marsupium* Roxb.
ஆங்கிலப் பெயர் - Malabar Kino or Indian Kino

பாடல்

"புலவரை வேங்கைப் பொன் மருள் நறுவீ"-ஐங். 217: 1

உரை

வேங்கை மலரின் செம்மை கலந்த மஞ்சள் நிறத்தைப் பொன்னிறமென்று புலவர்கள் பாடுவர்.

40 சங்க இலக்கிய பெயர் – வஞ்சி
தாவரவியல் பெயர் - *Salix tetrasperma* Roxb.
ஆங்கிலப் பெயர் - Indian Willow

பாடல்

“புவஞ்சி யோங்கிய யாண ரூர” - ஐங்குறுநூறு 50

உரை

வஞ்சிக் தழைக்கும் புது வருவாயை உடைய ஊரனே.

41 சங்க இலக்கிய பெயர் – ஆரம் – சந்தனம்
தாவரவியல் பெயர் - *Santalum album* L.
ஆங்கிலப் பெயர் - Sandalwood

பாடல்

“ஆரம் காழ்வை கடியிரும் புன்னை”- குறிஞ் 9:3

உரை

மணமிகு சந்தனம் (ஆரம்) வளரும் இடத்திலும், நீரில் விளையாடும் காழ்வை மீன்கள் கடித்துக் கொண்டிருக்கும் புன்னை மரங்களும் இருப்பதைப் பாடியுள்ளார் கவிஞர்.

42 சங்க இலக்கிய பெயர் – பிண்டி, செயலை, அசோகு
தாவரவியல் பெயர் - *Saraca ashoka*
ஆங்கிலப் பெயர் - Asoka Tree

பாடல்

“எரிஅவிர் உருவின் அம்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழல் இருந்தன மாக” - குறிஞ். 104-105

உரை

செக்கச் சிவந்த பிண்டி மலர்களையும், செவ்விய இதன் தளிர்களுடன் காதில் செருகி அணிவர் என்பர் புலவர்கள்

43

சங்க இலக்கிய பெயர் - பாதிரி
தாவரவியல் பெயர் - *Stereospermum chelonoides* (L.f.) DC.
ஆங்கிலப் பெயர் - Fragrant Padri Tree

பாடல்

"மாக்கொடி அதிரற் பூவொடு பாதிரித்
தூத் தகட்டு எதிர் மலர் வேந்தகூந்தல்" - நற்.52

உரை

சங்க கால மக்கள் பாதிரிமலரினை மல்லிகையுடன் சேர்த்து தமது கூந்தலில் சூடி மகிழ்ந்தனர்

44

சங்க இலக்கிய பெயர் – எட்டி மரம்
தாவரவியல் பெயர் – *Strychnos nux-vomica* L.
ஆங்கிலப் பெயர் - Strychnine Tree

பாடல்

"எட்டி மரம் புலம்பெய்த வனப்பின்
சுரும்பு குழாஅத்து ஓங்கிய களிற்றின்"– பு.நா. 192

உரை

எட்டி மரத்தின் கீழ் பசுமை சூழ்ந்த நிலம், அங்கு சுரும்புகள் (தேனீக்கள்) கூடி முழங்குகின்றன, அருகில் களிறு (ஆனை) வலம் வருகிறது.

45

சங்க இலக்கிய பெயர் - நாவல்
தாவரவியல் பெயர் – *Syzygium cumini* (L.) Skeels
ஆங்கிலப் பெயர் - Malabar Plum, Java Plum

பாடல்

"நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழை"
- -திருமுரு. 18

உரை

நாவல் மரம் பழமுற்று, காடு மலர்ந்த கிளைகளுடன் அழகாக விரிந்திருக்கிறது போன்ற இயற்கைச் சித்திரம்...

46 சங்க இலக்கிய பெயர் - தேக்கு
தாவரவியல் பெயர் – *Tectona grandis* L.f.
ஆங்கிலப் பெயர் - Teak

பாடல்

“தேக்கமல் சோலைக் கடறோங் கருஞ்சுரத்து” – அகம் 225

உரை

தேக்கமரங்கள் நிறைந்த சோலையினையுடைய காடு.

47 சங்க இலக்கிய பெயர் - மருதம்
தாவரவியல் பெயர் – *Terminalia arjuna* (Roxb. ex DC.) Wight & Arn.
ஆங்கிலப் பெயர் - Arjun Tree

பாடல்

“மருது உயர்ந்து ஓங்கிய விரிபூம் பெருந்துறை பெண்டிரொடு ஆடும் என்ப” - ஐங். 33 : 2-3

உரை

மருது மரம் உயர்ந்து, அதன் கிளைகளில் விரிந்த பூக்கள் மிளிரும் போல, காட்டு பெண்கள் பெரிய துறையில் ஆடும் உல்லாசத்தோடு என் மனம் மகிழ்கிறது.

48 சங்க இலக்கிய பெயர் - கடு
தாவரவியல் பெயர் – *Terminalia chebula* Retz.
ஆங்கிலப் பெயர் - Black Myrobalan, Gallnut

பாடல்

“கடுகலித்து எழுந்த கண் அகழ் சிலம்பில” - மலைபடு: 14

உரை

ஆழமான கண் போன்ற பள்ளங்களை உடைய கடு மரம், வலிமையுடன், ஆற்றலோடு செழித்து எழுந்தது.

49

சங்க இலக்கிய பெயர் - நொச்சி
தாவரவியல் பெயர் – *Vitex negundo* L.
ஆங்கிலப் பெயர் - Chaste Tree

பாடல்

"நொச்சி மௌவல் வான்முகைத்
துணைநிரைத் தன்ன மாவீழ் வெண்பல்"- அகம் 21

உரை

மனைமுன்றிலிலே இளமையுடைய நொச்சியின்மேலே படர்ந்த முல்லையினது வெள்ளிய அரும்புகள் தம்மில் அளவொத்தவற்றை நிரல்பட வைத்தாற் போன்ற வண்டுகள் விரும்புதற்குக் காரணமான வெள்ளிய பற்கள்

50

சங்க இலக்கிய பெயர் - பாலை
தாவரவியல் பெயர் – *Wrightia tinctoria* (Roxb.) R.Br.
ஆங்கிலப் பெயர் - Dyer's Oleander

பாடல்

"வண்டுபடு கூந்தல் முடிபுனை மகளிர்...
பேரியாழ் பாலை பண்ணி..." பதிற். 46: 4-6

உரை

பெண்கள் தங்கள் கூந்தலில் மலர்களைச் சூடி வண்டுகளை ஈர்த்தனர்; அப்பெண்கள் பேரியாழ் இசையை ஒலிக்கச் செய்து, பாலை மரங்களின் அருகில் விழாவை நடத்தினர்..

மூலம்

1. பாடல்: 03, 05, 07, 09, 12, 13, 14, 15, 17, 18, 20, 21, 26, 29, 31, 32, 33, 34, 35, 36, 37, 41, 42, 45, 47, 48, 50 - கு. சீநிவாசன் (986) - சங்க இலக்கியத் தாவரங்கள்
2. பாடல்: 06, 11, 25, 28, 40, 46, 49 - அறிஞர் பி. எஸ். சாமி (1992) - சங்க நூல்களில் மரங்கள்
3. இணையதளம்: 01, 02, 04, 08,10, 16, 19, 22, 23, 24, 27, 30, 38, 43, 44.

<u>ஆக்கம்</u>

இ. அன்வர்தீன்,
இ.வ.ப. முதன்மை தலைமை வன பாதுகாவலர் (ஆராய்ச்சி)

<u>ஊக்கம்</u>

கௌ. கீதாஞ்சலி,
இ.வ.ப. தலைமை வன பாதுகாவலர் (ஆராய்ச்சி)

த. ஈஸ்வரன்,
துணை வன பாதுகாவலர் (மாநில வன ஆராய்ச்சி கோட்டம்)

<u>உருவாக்கம்</u>

த. பிருந்தா,
வனச்சரக அலுவலர் - வண்டலூர் ஆராய்ச்சி சரகம்

பி.செ.விஷ்ணு பிரேம்செல்வா
வனவர் -வண்டலூர் ஆராய்ச்சி பிரிவு

அன்ஸா ஸாரா வர்கீஸ்
இளையர் இளநிலை ஆராய்ச்சியாளர்

இ. சில்வியா ஜூலியட்.
இளையர் இளநிலை ஆராய்ச்சியாளர்

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை
உரிஞ்சி உரி புனம் ஓதி,
தெய்வம் தொழுது, தொழில் புரிந்து,
வாழி யாம் எனும் நாடே. – கபிலர்

வெளியீடு
பசுமை தமிழ்நாடு இயக்கம்

24.09.2025 பசுமை தமிழ்நாடு இயக்க நாளன்று வெளியிடப்பட்டது